பக்கங்கள் 16 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## தேங்காய் வீழ்ந்து குழந்தை மரணம்



கண்டி, கலஹா பொலிஸ் பிரிவுக்குப்பட்ட தெல்தோட்டை நாராங்ஹின்ன தோட்டத்தில், 11 மாதப் பெண் குழந்தையின் தலையில் 05▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 04 திங்கட்கிழமை 17.06.2024 அதிர்வு 321

### ஜனாதிபதித் தேர்தலையொட்டி

# கட்சி தாவலால் அதிரப் போகும் அரசியல் களம்







**தெற்கு அரசியலில் வெகு விரைவில் ஏட்டிக்குப் போட்டியாகக் கட்சி தாவல்கள் சூடு பிடிக்கும் என்று சிங்கள வார இதழ்கள் செய்தி வெளியிட் டுள்ளன.**

**இதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்றும், கட்சி தாவும் காலப் பகுதி பற்றி ஆராயப்பட்டு வருகின்றது என்றும் தெரிய வருகின்றது.**

**இதன்படி ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே தாவல்கள் பெருமளவில் இடம்பெறக் கூடும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அரசுடன் இணையவுள்ளனர்.

அதேபோல் ஆளுங்கட்சி பக்கம் உள்ள 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கவுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

அத்துடன், சர்வஜன அதிகாரம் பக்கமும் சில எம்.பிக்கள் செல்லவுள்ளனர். மேலும் சிலர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

எனவே, கட்சி தாவல்கள் களைகட்டும் என்றும், சுமார் 40 வரையான எம்.பிக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை மாற்றத் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

### தமிழக மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக

# இந்தியத் துணைத் தூதரகத்தை நாளை முற்றுகையிடவுள்ளோம்

### யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

இந்திய இழுவை மடிப் படகுகளின் அத்துமீறல் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தக் கோரி நாளை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடப்போவதாக அறிவித்துள்ள யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், தமக்கு விரைவில் தீர்வு கிடைக்கா 05▶ விடில் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிடுவோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பிலான அறிவிப்பு



# யாழ். முஸ்லிம்களின் பெருநாள் தொழுகை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களின் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வழமை போன்று இம் முறையும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் இன்று காலை 6.30 மணியளவில் மௌலவி எம்.ஏ. பைசர் (மதனி) தலைமையில் இடம் பெற்றது.

இன்றைய பெருநாள் தொழுகையானது மர்யம் மஸ்ஜித்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

மௌலவி எம்.ஏ.பைசர் (மதனி) பெருநாள் தொழுகையை நடத்தியிருந்ததுடன், ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கியத்தும், நபி இப்ராஹீம் அலை அவர்களின் வாழ்வின் தியாகங்கள், அவரின் வாழ்க்கையின் முக்கிய படிப்பினைகளை கருப்பொருளாகக் கொண்டு பெருநாள் விசேட உரையும் நிகழ்த்தியிருந்தார்.

பெருநாள் தொழுகைக்காக ஜின்னா மைதான திடலில் இன்று ஆண்கள், உலமாக்கள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் என சுமார் ஆயிரக் கணக்கானோர் அணிதிரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில பள்ளி வாசல்களிலும் பெருநாள் தொழுகை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக் கதாகும்.
















# அடுத்த 5 ஆண்டுகளே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்

## அரசியல் தீர்வுகளைத் தேடும் இந்நாட்டு மக்கள் பொருளாதாரத் தீர்வுகள் குறித்து கவனம் செலுத்தவில்லை என்று ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

அடுத்த ஐந்து வருடங்களில் செயற்படுத்தப்படும் பொருளாதாரக் கொள்கைகளே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசியல் தீர்வுகளைத் தேடும் இந்நாட்டு மக்கள் பொருளாதாரத் தீர்வுகள் குறித்து கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற இளையோர் மற்றும் வர்த்தகர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

‘சுபீட்சமான எதிர்காலத்திற்கான பயணம்’ என்ற பெயரில் இளைஞர் அமைப்பு ஏற்பாடு ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு வடக்கு மாகாண கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது இளைஞர் மத்தியில் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களின் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கினார்.

கொவிட் – பொருளாதார நெருக்கடியின் காரணமாக 4 வருடங்களாக தொழில்களை வழங்க முடியாமற்போனதோடு, தொழில் கிடைத்த பலரும் அவற்றை இழந்து நிற்கும் நிலைமையும் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அதனால் புதிய பாதையில் சென்று தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமா, இல்லாவிட்டால் பழைய முறையில் சென்று வீழ்ச்சியடைவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதனையடுத்து மன்னார் மாவட்ட வர்த்தகர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில், அரசு முன்மொழிந்திருக்கும் வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிப் பயணிக்கும் பட்சத்தில், எதிர்காலத்தில் பெருமளவான முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருகைத் தருவர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலத்துக்குக் காலம் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமல், சரியான பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றினால் நாடு முன்னேற்றமடையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்காகவே பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தைச் சமர்பித்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அதனை

(04ஆம் பக்கம் பார்க்க)











# அடுத்த 5 ஆண்டுகளே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

எந்தவொரு அரசும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்றும் கூறினார்.

நீண்டகாலமாக அரசியல் ரீதியான தீர்வைத் தேடும் இந்நாட்டு மக்கள், ஒருபோதும் பொருளாதாரத்தின் பக்கமாக தீர்வைத் தேடவில்லை என்றும், சரியான பொருளாதாரக் கொள்கையின் ஊடாக மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சரிவடைந்திருந்தபொருளாதாரத்தை குறுகிய காலத்தில் கட்டியெழுப்ப தன்னால் முடிந்ததெனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதாரம் வலுவடையும்போது, அதன் பலன்கள் சகல தரப்பினருக்கும் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பரந்தளவான அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண ஆளுநர். பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் உள்ளிட்டவர்களும் அரசியல் பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.
















# கிண்ணியா விபத்தில் குடும்பஸ்தர் பலி!



(கியாஸ் ஷாபி)

கிண்ணியா, பைசல் நகர், ஜித்தா நகரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று இரவு, சீனக்குடா வெள்ளை மணல் பகுதியில் வைத்து, இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் பலியானார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

48 வயதான அப்துல் மஜீத் நசுறுள்ளா என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பலியானவராவார்.

விபத்தில் பலியானவர், கிண்ணியாவிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றவர் என்றும், விமானப்படை உத்தியோகத்தர் ஒருவர், கிண்ணியா நோக்கி வந்து கொண்டிருந்தவர் என்றும், இருவருடைய மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விமானப்படை உத்தியோகத்தர் பலத்த காயங்களுக்குள்ளாகி, திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஓட்டோ விபத்தில் இருவர் படுகாயம்

(நானுஓயா நிருபர்)

நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதியில் ஓட்டோ ஒன்று இன்று காலை குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நானுஓயாவில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணம் மேற்கொண்டு மிகவும் சரிவான ரதல்ல குறுக்கு வீதியில் அபாயகரமான வளைவில் ஓட்டோ சாரதிக்கு ஓட்டோவின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி விபத்தில் ஓட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இந்தியத்...

வெளியிடப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் சிறீ கந்தவேல் புனித பிரகாஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்திய இழுவை மடிப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடு எமது கடற்பகுதிகளில் அரங்கேறி வருகின்றது. இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெருமளவு பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

நாளை காலை 10 மணிக்கு இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்பாகப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம். ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர், துறைசார்ந்த திணைக்களங்கள் விரைந்து செயற்பட்டு இந்திய இழுவை மடிப் படகுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் நாடாளுமன்றத்தை முற்றுகையிட எமது அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன." – என்றார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் சம்மேளன தலைவர் செல்லத்துரை நற்குணம் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்திய இழுவை மடி கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் எமது மக்கள் வீதிக்கு வந்து பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டி வரும். சிறுவர் தொடங்கி பெரியவர் இதன்மூலம் பாதிப்புக்களை எதிர்கொள்வர்.

இலங்கை அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித நேயத்துடன் இந்திய மற்றும் தமிழக அரசு செயற்பட வேண்டும். இந்தியாவின் மிலேச்சத்தனமாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக நாளை நடைபெறவுள்ள போராட்டத்தில் அனைத்து கடற்றொழிலாளர்களையும் பங்கேற்குமாறு வேண்டுகின்றோம்." – என்றார்.

### தேங்காய்...

தேங்காய் வீழ்ந்ததில் அக்குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

லோகேஸ்வரன் கியாஸ்சினி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

அந்தக் குழந்தையைத் தந்தை தூக்கி செல்லும்போதே இந்தச் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தலைப் பகுதியில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் தெல்தோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின் அங்கு இருந்து உடனடியாக பேராதெனிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டது.

குழந்தை அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

மேலதிக விசாரணைகளைப் கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அபூர்வ வாய்ப்பு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்படுமாக இருந்தால், அதில் தமிழ்ப் பேசும் மக்களின் வாக்குகள் பிரதானமானவையாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது என்று சுட்டிக் காட்டி இருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் முத்தரப்பு போட்டி என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. சுமந்திரன் கூறுவது போல இந்த வாய்ப்பை நாம் உதாசீனம் செய்யக்கூடாது என்பதற்கு அப்பால், அதனை தந்திரமாகவும் புத்திசாதுரியமாகவும் கையாண்டு, செய்யக் கூடியவற்றை செய்து கொள்ள வேண்டும்.

வரலாற்றில் வாய்ப்புகள் எப்போதும் தேடி வருவதில்லை. தேடி வரும் சந்தர்ப்பங்களை உதாசீனம் செய்பவன் அல்லது எட்டி உதைப்பவன் என்றும் உய்யப் போவதில்லை. இதுவே எல்லோரினதும் அனுபவப் பட்டறிவு.

கிடைக்கும் வாய்ப்புகளை - இயலுமை தரும்சந்தர்ப்பங்களை-வெற்றிகரமாகவும் சரியாகவும் பயன்படுத்துவதுதான் அரசியல் சாணக்கியம்.

இலங்கையின் அதிபர் தேர்தல் என்பது எப்போதும் மும்முனைப் போட்டியாக அமைந்ததே இல்லை. நடந்து முடிந்த எட்டு ஜனாதிபதி தேர்தல்களிலும் போட்டி பிரதான இரண்டு கட்சிகளின் வேட்பாளர்கள் இடையேதான். இப்போதுதான் மூன்றுமுனைப் போட்டி வந்திருக்கின்றது. அத்துடன் எந்த வேட்பாளரும் இன்னமுமே 25 வீத வாக்காளர்களின் முழுமையான ஆதரவைக் கூட வெல்லவில்லை என்றும், மூன்று வேட்பாளர்களுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்றது என்றும் கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

அதுதான் நிலைமை என்றால் - தமிழ் பேசும் மக்கள் இந்தத் தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாக எழ முடியும். வரலாறு அத்தகைய ஒரு பிரதான பாத்திரத்தை நமது மடியில் தேடி வந்து போட்டிருக்கின்றது. அந்த வரலாற்று வாய்ப்பை, பழங்கதை சரித்திரங்கள் பேசி, வெற்றுக் கோஷ முழக்கங்களை முன்வைத்து, தோற்கடித்து, நாமே நம் தலையில் மண்ணை வாரிக் கொட்டப் போகின்றோமா அல்லது நம் தமிழினத்தை நம் தாயக மண்ணில் தக்க வைப்பதற்கு சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் புத்திபூர்வமாகப் பயன்படுத்தப் போகின்றோமா என்பதை நாங்கள்தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இன்று முத்தரப்பாக இந்தத் தேர்தலில் மோதும் மூன்று தலைவர்களில் இருவர் இப்போது எதிர்க்கட்சி வரிசைகளில் அமர்ந்திருப்பவர்கள். மூன்றாவது தலைவர் நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியைத் தற்போது வகிப்பவர்.

மூவருமே வழமையான இலங்கைத் தேர்தல் முறைமைகளுக்கு மாறாக, வாக்குச் சுருட்டுவதற்கு பௌத்த - சிங்களப் பேரினவாதத்தை தமது கையில் இம்முறை - இதுவரை - எடுக்காத நிலைமையும் காணப்படுகின்றது.

பேரம் பேசுவதற்கும் நிபந்தனை விதித்து, காரிய மாற்றுவதற்கும் சாலச் சிறந்த சமயம் இதுபோல எப்போதும் இனி தமிழருக்கு வராது.

எதிரணித் தரப்பு வேட்பாளர்கள் இருவருமே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலும் 13 ஆவது திருத்த நடைமுறையாக்கம் சம்பந்தமாகவும் தங்கள் கருத்துக்களை - நிலைப்பாட்டை - கூறிவிட்டனர். அவை நம்பிக்கை ஊட்டும் வாக்குறுதிகளே தவிர, நடவடிக்கைகள் அல்ல. அவர்கள் வென்று ஆட்சிக்கு வந்தால்தான் அவற்றைச் செய்ய முடியும். செய்ய வேண்டும்.

ஆனால் மூன்றாவது வேட்பாளர் நிலைமை அதுவல்ல. அவர் தற்போதைய ஜனாதிபதி. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை நிறைவேற்றதிகாரம் அவர் கைகளில்தான் இருக்கப் போகின்றது. அவருடன் தமிழர் தரப்பு பேசும்போது மற்றிருவருடனும் பெற்றமை போல வாக்குறுதிகளைப் பேசிப் பெறுவதில் அர்த்தமில்லை. அதையும் தாண்டி, அந்த வாக்குறுதிகளுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளின் ஆரம்பத்தை இப்போதே செயலில் ஏற்படுத்திக் காட்டும்படி அவரை வற்புறுத்திக் கோர முடியும். உதாரணத்துக்கு தான் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் கடந்த ஆறு வருடங்களுக்கு மேல் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவேன் என்று அவர் வாக்குறுதி அளித்தால், அதற்கான தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை இப்போதே - ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே - நிறைவேற்றச் செய்து, ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதை இப்போதேசெயலில்உறுதிப்படுத்துமாறு கேட்கலாம்.

இப்படி தந்திரோபாயமான முறையில் பேரம் பேசுவதன் மூலம் இந்த அபூர்வ வாய்ப்பைத் தமிழினம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே சிறப்பு.





# பாடசாலை மாணவருக்கு உபகரணம் வழங்கிய வடமராட்சி ஊடக இல்லம்

யாழ்ப்பாணம், வடமராட்சி ஊடக இல்லத்தால் தெரிவு செய்யப்பட்ட 12 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தின் தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம் பெற்றது.

இதில் கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு நிதி பங்களிப்பை புலம்பெயர் உறவான ப. தேவநாயகம், மற்றும் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் தலைவர் கு.மகாலிங்கம் ஆகியோர் வழங்கினர். ஒவ்வொருவருக்கும் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான புத்தகப்பை, அப்பியாசக் கொப்பி என்பனவே இவ்வாறு வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள், நிதிக் கொடையாளர் பா. தேவநாயகம். யாழ் வடமராட்சி ஊடக இல்ல உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வியன்கல்லை மக்களுக்கு உலர் உணவுகள் வழங்கி வைப்பு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

களுத்துறை மாவட்டத்தில் உள்ள வியன்கல்லைப் பகுதி அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பேருவளை சீனன் கோட்டைப் பகுதி வாழ் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் வியன்கல்லை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் உத்தியோகபூர்வமாக சீனன் கோட்டைப் பிரமுகர்களினால் கையளிக்கப்பட்டன.

இந்தப் பொருள்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 550 குடும்பங்களுக்கு பள்ளிவாசல் நிர்வாகிகளான, அல் ஹாஜ் எச்.எம்.எம்.றியாஸ் மற்றும் அல் ஹாஜ் எம்.ஐ.எம்.இஷாக் ஆகியோர் வழங்கினர்.

வெள்ளம் ஏற்பட்ட கடந்த 2 ஆம் திகதி முதல் சீனன் கோட்டைப் பகுதி சமூக சேவையாளர்கள் குழுவினர் வியன்கல்லைக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகளை இரவு, பகலாக வழங்கினர். நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு படகு மூலமும் சென்று இவர்கள் உதவிக் கரம் நீட்டியுள்ளனர். இவர்களின் சேவைகளுக்கும், உலர் உணவுப் பொதிகள், சமைத்த உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொடுத்த சீனன் கோட்டை வாழ் மக்களுக்கு வியன்கல்லை வாழ் மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.





# பெரியாற்றுமுனையில் அமைந்துள்ள பல்தேவை நிலையம் திறந்து வைப்பு

(ஹஸ்பர்)

கிண்ணியா நகர சபையின் செயலாளர் தலைமையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் பெரியாற்றுமுனையில் அமைந்துள்ள பல்தேவை கட்டடம் நேற்று முன்தினம் (15) திறந்து வைக்கப்பட்டது.

இதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிண்ணியா நகர சபையின் முன்னால் தவிசாளர்களான சட்டத்தரணி ஹில்மி மகரூப், எஸ்.எச்.எம். நளீம், முன்னால் உறுப்பினர்களான எம்.எம். மஹ்தி, எம்.ஏ. கலிபத்துள்ளா, எம்.எச்.எம். ராபி ஆகியோரும், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி, உலமா சபை தலைவர்,




சனசமூக அபிவிருத்தி அங்கத்தவர்கள், பெண்கள் அமைப்புக்கள், மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.





EVERST FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# மன்னார் மாவட்ட தேசிய பாடசாலைகளின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் மாவட்ட தேசியப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்கள், தளபாடப் பற்றாக்குறை, மாணவர்களின் கற்றலுக்கு ஏதுவான போதுமான கட்டடங்கள் இல்லாமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டியில் ஹஜ்ஜுப் பெருநாள் கவி அரங்கம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில், ஹஜ் பெரு நாளை முன்னிட்டு முதன் முறையாக கவி அரங்கம் எனும் சிறப்பு நிகழ்வு ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 03 மணிக்கு நடைபெறவுள்ளது.

கற்பிட்டி கலை இலக்கிய துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆரம் பிக்கப்பட்டுள்ள தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் கன்னி நிகழ்வாக இடம்பெறவுள்ள கவி அரங்கம் நிகழ்வில் கற்பிட்டியில் இலை மறை காய்களாக காணப்படும் மூத்த கவிஞர்கள் மற்றும் இளம் புதுக் கவிஞர்கள் தமது கவித் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலை ஆர்வம் மிக்க அனைவரையும் கலந்து கொள் ளுமாறு கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளர் சியாஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புத்தளம் ரத்மல்யாவில் மர நடுகை!

(கற்பிட்டி எம் எச்.எம் சியாஜ் )

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புத்தளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மர நடுகை வேலைத்திட்டமும், சிரமதானப்பணியும் இன்று புத்தளம் ரத்மல்யாய கிராம சேவகப்பிரிவில் நடைப்பெற்றது.

புத்தளம் ரத்மல்யாயா கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் தௌபீகா தலைமையில் நடைப்பெற்றது. சமூக ஆர்வலரும், புத்தளம் மத்தியஸ்த சபை அதிகாரியுமான முஜாஹித் நிஸார் முதல் மரக்கன்றை நட்டு வைத்தார்.

சிட்டி போயிஸ் சமூக அமைப்பு , அப்பிரதேசத்தின் மகளிர் அமைப்பின் உதவியுடன் இது நடைப்பெற்றது. அப்பிர தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பார்த்தீபன், சமுர்த்தி அபிவிருத்தி திருமதி ரினூஸா வழி காட்டலில் நடைபெற்றது.








# கற்பிட்டி திகழி அல் மதீனாவுக்கு 15 மில்லியன் ரூபா நிதி உதவி!

## பெற்றுக் கொடுத்தார் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் தாஹிர்

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )**

கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என்.டி எம் தாஹிர் பதவியில் இருந்த காலப் பகுதியில் வடமேல் மாகாண சபை ஊடாக பெற்றுக் கொடுத்த இரு மாடிக் கட்டடத்தின் கீழ் பகுதி கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டது.

எனினும் மேல் தள கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டால் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

தற்போது மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டுக்கு உரிய வகுப்பறைகள் குறைபாடாக காணப்பட்டதால் கட்டடத்தின் மேல்மாடிக்கான தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டு முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் தாஹிர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக தற்போது வடமேல் மாகாண சபையில் இருந்து சுமார் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை (13) கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் செய்த முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என்.டி.எம் தாஹிர், கட்டடத்தைப் பார்வை இட்டதோடு துரிதமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சிபான், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.







# மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

(எம்.ஏ.றமீஸ்)

தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் மனைப் பொருளாதார அபிவிருத்தி ஆகிய வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளில் மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் விவசாயத் திணைக்களத்தின் மூலம் பல்வேறு வேலைத் திட்டங்கள் நாடு தழுவிய ரீதியில உள்ள கிராம மட்டங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, ஒலுவில் நுஜா மகளிர் விவசாய விரிவாக்கல் அமைப்பின் மூலம் மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் 'கை வினைப் பொருள்கள் தயாரிக்கும் விஷேட பயிற்சிகள்' ஒலுவில் பிரதேசத்தில் இடம்பெற்றன.

அமைப்பின் தலைவி ஏ.எல்.நயிமா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது அம்பாறை விவசாய விரிவாக்கல் பயிற்சிப் பிரிவின் வளவாளர் எஸ்.ஜீவிதா பிரதம வளவாளராக கலந்து கொண்டு இல்லத் தலைவிகளுக்கும் யுவதிகளுக்குமான பயிற்சிகளை வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் கே.ஏ.கே.ஏஸ்.லக்மால் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வின்போது தலைமை விவசாய போதனாசிரியர் ஆர்.விஜயராகவன், விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பி.நிரோசன் உள்ளிட்ட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளில் இலகுவில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு காலத்துக்கு ஏற்ற வகையில் அனைவரும் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களை குறைந்த செலவில் சுகாதார முறையில் உற்பத்தி செய்யும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

# திருகோணமலை ஆதியம்மன்கேணி பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் திருகோணமலை மூதூர் கல்வி வலயத்தில் உள்ள ஆதியம்மன் கேணி வித்தியாலய பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்குக் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் மா. வர்ண குலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

“எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்” எனும் தொனிப் பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக வழங்கி வருகிறது.

உதவி வழங்கும் பாடசாலைகளில் இந்தப் பாடசாலையானது 138 ஆவது பாடசாலையாக உள்ளது.

இலங்கையில் இன, மதம், மொழி பாராமல் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் மற்றும் மேலதிக கல்வி செயற்பாட்டுக்கான உதவியை இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது.

இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான சி.காந்தன், லோ. கஜரூபன், எஸ்.சுரேஸ், மா.ஜெகனாதன் ஆகியோர் இந்த உபகரணங்களை வழங்கினர்.






# இரண்டு பாடசாலைகளுக்கு போட்டோ கொப்பி இயந்திரம்

## முஷாரப் எம்.பியின் நிதியுதவியில் வழங்கல்

(றிஸ்வான் சாலிஹூ)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவு நிதியில் இருந்து சம்மாந்துறை சபூர் வித்தியாலயம் மற்றும் சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளது நீண்ட காலத் தேவையாக இருந்த போட்டோ கொப்பி இயந்திரங்கள் பாடசாலை அதிபர்களிடம் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் எம்.ஐ.எம்.றனூஸ், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மஹேந்திரகுமார், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல், சம் மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.








# சேர் ஜோன் ஹாபட் தடகள போட்டி; தெல்லிப்பளை மகாஜன சாதனை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சேர் ஜோன் ஹாபட் தடகள போட்டியில் யாழ். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சேர் ஜோன் ஹாபட் தடகள போட்டிகள் யாழ்ப்பாணம் துரை யப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

15 வயது பெண்களுக்கான உயரம் பாய்தலில் ரீ.ஆந்திர முதலாம் இடத்தையும், தட்டெறிதலில் பீ.பிரசாலினி இரண்டாம் இடத்தையும், சட்டவேலி (தடைதாண்டல்) போட்டியில் ரீ.ஆரதி இரண்டாம் இடத்தையும் 400 மற்றும் 1600 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளில் இரண்டாம் இடங்களையும், 13 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றரில் கெவீன்லீதன் மூன்றாம் இடத்தையும், உயரம் பாய்தலில் பிரவீன் இரண்டாம் இடத்தையும், 14 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றரிலும் 400 மீற்றரிலும் 100 மீற்றரிலும் கபிஷன் இரண்டாம் இடங்களையும், நீளம் பாய்தலில் கிருத்திகன் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.



# அல் அஷ்ஹர் பாடசாலையில் புதிய கட்டடம் திறப்பு!

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை அல் அஷ்ஹர் வித்தியாலயத்துக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து அமைக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் ஜப்பார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாகச் சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார். அத்துடன் பாடசாலையின் வளாகத்தைப்பார்வையிட்டு பாடசாலையில்உள்ள குறைநிறைகளையும் கேட்ட றிந்தார்.

பாடசாலையின் வளாகத்தில் பயன்தரக் கூடிய மரம் நடும் திட்டத்தின் அங்குரார்பண நிகழ்வும் இடம்பெற்றது. வலய கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் மரத்த நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வுக்குப் பிரதிக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) பி.எம். வை.அரபாத் முகைடீன், பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பி.பரம தயாளன், பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) ஆ.நைரூஸ் கான், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# தென்புலோலி சாமுண்டிகாதேவி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை

தென்புலோலி குரும்பைகட்டி அருள்மிகு சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைவரை நடைபெறவுள்ளது.

திருவிழா தினங்களில் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு வளந்து கட்டல் பூஜை இடம்பெறும். மறுநாள் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பொங்கல் பூஜை நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு கடா ஆடுகள் ஏலத்தில் விற்கப்படும்.

02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு விசேடபூஜை இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று சாமுண்டிகா தேவி சமேத ஞான வைரவப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் வீதியுலாவருவார்.

# வரிசைகள் எவையும் இல்லை என்பதற்காக நாடு ஸ்திரநிலையை அடைந்து விடவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் வினோகாந்த்

( வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் பெட்ரோல் நிலையங்களில் வரிசை இல்லை. சிலிண்டருக்கு வரிசை இல்லை என்பதை மாத்திரம் வைத்துக் கொண்டு நாடு ஸ்திரமான நிலையை அடைந்துள்ளது என்று சொல்ல முடியாது . நிரந்தரத் தீர்வுக்கு ஒரே வழி சஜித் பிரேமதாசா மட்டுமே.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட பொத்துவில் தேர்தல் தொகுதியின் இணை அமைப்பாளரும் கல்வி ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளரும் இளைஞர் சக்தியின் மாவட்ட செயலாளருமான வெள்ளையன் வினோகாந்த் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு தெரிவித் திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்,

அன்று அறகலய சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று சஜித் பிரேமதாசவை கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர் அதனை ஏற்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்திருந்தது. தற்போது அந்தச் சந்தர்ப்பத்தை இந்தத் தேர்தலில் காட்டுங்கள் .

நாட்டு மக்கள் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கான ஆணையை வழங்கியிருந்தார்கள். தற்போதைய சமகாலத்தில் புதிய அரசியல் சூழல் ஒன்று உருவாக்கியுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது. எனவே அறகலைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பதவியை ஏற்குமாறு கூறியவர்கள் மற்றும் இந்த நாட்டு மக்களையும் பார்த்துக் கேட்கிறோம். நீங்கள் ஆசைப்பட்டதைப் போல் உங்கள் வாக்குகளை இந்த தேர்தலில் சஜித் பிரேமதாஷவுக்கு வழங்கி வையுங்கள் .

இன்று வானத்தைத் தொடும் அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்து விட்டன. மூன்று வேளை உண்ட சாதாரண மக்கள் இன்று இரண்டு வேளை உண்ணும் அளவுக்குச் சென்று விட்டார்கள். இலங்கையினுடைய வாழ்வாதாரத்தை உலக அமைப்புகள் திட்டவட்டமாக 75 லட்சம் சதவீதமான ஆதாரத்துக்கு அங்கலாய்த்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் அனைத்து மாவட்டங்கள் தோறும் சென்று வைத்தியசாலைகளாக இருந்தாலும் பாடசாலைகளாக இருந்தாலும் பார்த்துப் பார்த்து தனது




சேவைகளை செய்து கொண்டிருக்கின்றார். இன்று வங்கியில் பல கோடி ரூபா வைத்துக் கொண்டு மக்களுக்கு எதுவும் செய்யாமல் சஜித் பிரேமதாசவை விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவை ஏட்டுச் சுரக்காய்க்கு ஒத்ததாகவே கொள்ளப்படுகின்றது .

நாட்டில் தோன்றியுள்ள இந்தப் பெரிய பாதாளத்தை நாங்கள் மூட வேண்டுமானால் நல்லதொரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் பசித்த வயிற்றுக்கான ஆகாரம் உங்களை தேடிவரும். எனவே எதிர்காலத்தில் எங்கள் பிள்ளைகளின் வாழ்வாதாரம் கல்வி, இலங்கை என்பதோ அல்லது உலகம் என்பதோ எங்களுக்கானது மாத்திரமல்ல எதிர்கால சந்ததிக்கு உரியது. எனவே தற்போது இந்த அரசியல்வாதிகளின் அசமந்த போக்கால் வங்குரோத்தை நோக்கி சென்றுவிட்டது.

இந்த வங்குரோத்தில் இருந்து விடுபட ரணில் விக்ரமசிங்கவால் மாத்திரம் முடியாது. நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர் பெரிய வேலை செய்து கொண்டிருக்கின்றார் என்று. கடன் சுமைகள் கடனுக்கு மேல் கடன் சென்று கொண்டிருக்கின்றதே தவிர இந்தக் கடனைச் செலுத்துவதற்கான, மீண்டு வருவதற்கான எந்த திட்டமும் அவரிடம் இல்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியிடம் அதற்கான திட்டங்கள் உள்ளன.

சமகாலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து நல்லாட்சி அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் வந்து இணைந்து கொண்டிருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் வித்தியாசமான கட்சிகள் மற்றும் கிராம மட்டத்தில் இருக்கும் தலைவர்கள் கூட இணைந்து கொண்டிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஏனைய கட்சி மற்றும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு இந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரை ஜனாதிபதியாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் கூறியிருந்தார்கள். எனவே சஜித் பிரேமதாஷ ஜனாதிபதியாக வருவதை யாராலும் தடுக்க முடியாது என்பதற்கு இது ஒரு உதாரணம். இலங்கையில் உள்ள அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்துவம் பெற்று கொள்வதற்கான வாசல் திறந்தே இருக்கின்றது .

ஜாதி, மத பேதங்களைக் கடந்து நல்லாட்சியை வழங்கக் கூடிய தலைவரான சஜித் பிரேமதாஷ வடக்கு, கிழக்கு, கொழும்பு ,மத்திய பிரதேசம், தமிழ் ,முஸ்லிம், சிங்களம் என பேதமில்லாமல் அவருடைய செயற்பாடுகள் மற்றும்நலத்திட்டங்கள் அனைவரையும் சென்றடைந்து கொண்டிருக்கின்றது .

சஜித் பிரேமதா சபை ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைக்கக்கூடிய அனைவருக்கும் மன வாசல் திறந்து இருக்கின்றது. எதிர்காலம் எங்களுடைய பிள்ளைகளுக்கானது. எனவே சஜித் பிரேமதாசவினால் நல்லதொரு எதிர்காலம் உங்களுக்கு அமையும்.- என்றார்.

# மேற்கு வங்கத்தில் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து: உயிரிழப்பு எண்ணிக்கை 15 ஆக அதிகரிப்பு



மேற்குவங்கத்தில் கஞ்சன்சங்கா எக்ஸ்பிரஸ் ரயில் மீது சரக்கு ரயில் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 60 பேர் காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளதால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. விபத்துப் பகுதியில் மீட்புப் பணிகளை முடுக்கிவிட முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில், ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் சம்பவ சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம் நியூ ஜல்பைகுரி மாவட்டத்தில் இன்று காலை 9 மணியளவில் கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயில் மீது சரக்கு ரயில் மோதியது. இந்த ரயில் அசாமின் சில்சாரில் இருந்து மேற்குவங்கத்தின் சேல்டா மாவட்டம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. அப்போது நியூ ஜல்பைகுரியில் விபத்து நடந்துள்ளது. பின்னால் இருந்து சரக்கு ரயில் மோதியதில் கஞ்சன்ஜங்கா ரயிலின் பெட்டிகள் சேதமடைந்தன.

இதற்கிடையில் சரக்கு ரயில் சமிக்ஞையை சரியாக கவனிக்காமல் முன்னேறியதால் இந்த விபத்து நடந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன. இது இன்னும் ரயில்வே துறையால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த விபத்து குறித்து மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, "டார்ஜிலிங்கின் பான்சிதேவாவில் நடந்த ரயில் விபத்து குறித்த தகவலறிந்து வருந்துகிறேன். கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயில் மீது சரக்கு ரயில் மோதியதாக தகவல் கிடைத்துள்ளது. மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர், மருத்துவர்கள், பேரிடர் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். ஆம்புலன்ஸ்களும் விரைந்துள்ளன." என்று பதிவிட்டுள்ளார்.

அதேபோல் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், விபத்துப் பகுதியில் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். அவர் சம்பவ இடத்துக்கும் விரைந்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆறுதலைத் தெரிவித்துள்ளதோடு உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபா இழப்பீடும், காயமடைந்தவர்களுக்கு தலா 50000 ரூபா நிவாரணத் தொகையும் பிரதமர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக விடுவித்து உத்தரவிட்டுள்ளார்.

# காங்கிரஸில் உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி காவிரி நீரை பெறுக: ஓ.பி.எஸ். வலியுறுத்தினார்



"முதல்வர் ஸ்டாலின் காங்கிரஸ் தலைமையிடத்திலும், கர்நாடக காங்கிரஸ் கட்சி தலைவர்களிடத்திலும் தனக்குள்ள செல்வாக்கினைப் பயன்படுத்தி தமிழகத்துக்கு உரிய நீரினை பெற்றுத் தர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு விவசாய பெருமக்களிடையே ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

"உச்ச நீதிமன்றம் மற்றும் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். ஆனால், தமிழகத்துக்கு திறந்துவிட வேண்டிய உரிய நீரினை உரிய நேரத்தில் அளிக்க மறுப்பதை கர்நாடக அரசு வாடிக்கையாக கொண்டுள்ளது.

காவேரி நீரில், தமிழகத்தின் பங்கான 177.25 டி.எம்.சி. அடி நீரை ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்துக்கு கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்பதும், இந்த நீர் மாதாந்திர அடிப்படையில் திறக்கப்பட வேண்டும் என்பதும், இதன் அடிப்படையில் ஜூன் மாதத்தில் 9.19 டி.எம்.சி. அடி நீர் அளிக்கப்பட வேண்டும் என்பதும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு. ஆனால், இதனை அளிக்க மறுத்து வரும் கர்நாடக அரசு உபரி நீரை மட்டுமே அளிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளது.

இந்த ஆண்டு, மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இல்லாததன் காரணமாக, டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்காக ஜூன் 12 ஆம் திகதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இதன் விளைவாக, குறுவை சாகுபடி பாதிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை என்பது ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் இறுதி வரை நீடிக்கக்கூடியது. நடப்பாண்டில். இதுவரை காவேரி படுகையில் இயல்பை விட அதிக அளவு மழை பெய்துள்ளதையும், இந்த ஆண்டு பருவமழை இயல்பாக இருக்கும் என இந்திய வானிலை மையம் கணித்துள்ளதையும் கருத்தில்கொண்டு, தண்ணீரை மாதாந்திர அடிப்படையில் கர்நாடகம் தமிழகத்துக்கு திறந்து விட்டால்தான் தமிழக விவசாயிகள் குறுவை சாகுபடியினை மேற்கொள்ள முடியும்.

இது, இரண்டு மாநிலங்களுக்கும் பயனளிக்கக்கூடிய ஒன்று. இதைச் செய்யாமல், கர்நாடகாவில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் நிரம்பிய பிறகு, கர்நாடகத்தின் தேவைகள் அனைத்தும் நிறைவடைந்த பிறகு, தென்மேற்கு பருவமழை முடிகின்ற தருவாயில் உபரி நீரை மட்டும் தமிழகத்துக்கு அளிப்பது என்பது தமிழகத்துக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் செயல்." - என்று குறிப்பிட்டுள்ளார்.






# மலாவி துணை ஜனாதிபதியின் இறுதி ஊர்வலத்தில் நால்வர் பலி

மலாவியில் மறைந்த துணை ஜனாதிபதி சொலோஸ் சிலிமாவின் உடலை ஏற்றிச்சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மலாவியில் மறைந்த துணை ஜனாதிபதி சொலோஸ் சிலிமாவின் உடலை ஏற்றிக்கொண்டு தொடரணியாக சென்ற வாகனங்கள் பயணித்துள்ளன.

இந்த தொடரணியில் இராணுவம், பொலிஸ் மற்றும் ஏனைய வாகனங்கள் அணிவகுத்துச் சென்றன.

இதன்போது, துணை ஜனாதிபதியின் இறுதி ஊர்வலத்தினைக் காண ஏராளமானோர் வீதிகளில் திரண்டிருந்தனர்.

சில பகுதிகளில் மக்கள் வீதியை வழிமறித்து, தொடரணியை நிறுத்தியுள்ளனர். அஞ்சலி செலுத்த அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையிலேயே துணை ஜனாதிபதியின் உடலை ஏற்றிக் கொண்டு தொடரணியாக பயணித்த வாகனம், வழியில் காத்திருந்தவர்கள் மீது மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகனம் மோதியதில் 2 பெண், 2 ஆண் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்படுகின்றது.

மறைந்த துணை ஜனாதிபதி சொலோஸ் சிலிமாவின் உடல் அவரது சொந்த கிராமமான சைப்-க்கு நேற்று கொண்டு செல்லப்பட்டது.

அந்தக் கிராமம் அந்நாட்டு தலைநகர் லிலோங்விலிருந்து 180 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ளது.

இந்த கிராமத்தில் வைத்தே அவரது இறுதி சடங்குகள் நடைபெறவுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, இன்று நடைபெறும் இறுதி சடங்கு காரணமாக அந்நாட்டில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான மலாவி நாட்டில் துணை ஜனாதிபதியாக செயற்பட்ட சொலோஸ் சிலிமா பயணம் செய்த விமானம் அண்மையில் விபத்தில் சிக்கியது.

இதில் துணை ஜனாதிபதி உட்பட விமானத்தில் பயணம் செய்த ஒன்பது பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# சோமாலியாவில் இராணுவ வாகனம் மீது குண்டுத் தாக்குதல்; 8 வீரர்கள் உயிரிழப்பு

சோமாலியாவில் இராணுவ வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 8 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரவிக்கின்றன.

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் பல்வேறு பயங்கரவாத குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில், அவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனினும் தாக்குதல் சம்பவங்கள் குறைந்தபாடில்லை.

இந்த நிலையில், சோமாலியாவின் தென்மேற்கு பகுதியிலுள்ள பைடோவா நகரிலிருந்து பெர்டேல் நகருக்கு சென்ற இராணுவ வாகனங்களை குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதாவது, இராணுவ வீரர்களின் வாகனங்கள் பயணித்த வீதியில், வெடிகுண்டை புதைத்து வைத்த பயங்கரவாதிகள், இராணுவ வாகனம் பயணிக்கையில் வெடிகுண்டை



வெடிக்கச் செய்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில், ஒரு வாகனம் வெடித்துச் சிதறியதில், இராணுவ தளபதி முகமது தேரே உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 11 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என குறிப்பிடப்படுகின்றது.

படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு அல் கொய்தாவுடன் தொடர்புடைய அல்-ஷபாப் அமைப்பு பொறுப்பேற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 04
கனடா முரசு
திங்கட்கிழமை 17/06/2024

## கிழக்குக் கனடாவில் அதிக வெப்பநிலை

ஒன்ராரியோ, ஜூன் 17
இந்த வாரம் கனடாவின் கிழக்குப் பகுதியில் அதிக வெப்பநிலை காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
C2




# உக்ரேனிய குழந்தைகளைச் சிறைபிடிக்கும் இனப்படுகொலைக்கு ரஷ்யாவே பொறுப்பு!

## கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காட்டம்

ஒன்ராரியோ, ஜூன் 17
உக்ரேனிய குழந்தைகளைச் சிறை பிடிக்கும் இனப்படுகொலைக்கு ரஷ்யா பொறுப பேற்க வேண்டும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உக்ரைன் அமைதி மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்கிறார்.

ஆயிரக்கணக்கான உக்ரேனிய குழந்தைகளை அவர்களின் வீட்டில் இருந்து அழைத்துச் சென்று அவர்களின் உக்ரேனிய அடையாளத்தை அழிக்க முயற்சிப்பதன் மூலம் ரஷ்யா இனப்படுகொலையை நிகழ்த்துவதாக அவர் ஊடகவியலாளர் களிடம் கூறியுள்ளார்.
C2

# வாகனத் திருட்டுகளைக் கட்டுப்படுத்த கனடாவில் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

ஒன்ராரியோ, ஜூன் 17
வாகனத் திருட்டை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

வாகனத் திருட்டை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய செயல் திட்டம், காவல்துறைப் படைகளுக்கு இடையே அதிக உளவுத்துறைப் பகிர்வு மற்றும் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களை உள்ளடக்கிய ஒரு பணிக்குழுவையும் உள்ளடக்கியுள் ளது.

வாகனங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் கப்பல் கொள்கலன்களின் தேடலை விரிவுபடுத்தும் பணியை கனடா எல்லைச் சேவைகள் நிறுவனத்




துடன், துறைமுகங்களில் மேலும் தலையீடுகள் செய்யுமாறும் இது அழைப்பு விடுக்கிறது.

ஒரு சிக்கலான மற்றும் வளர்ந்து வரும் சர்வதேச அக்கறை என்று விவரிக்கும் ஒரு உச்சிமாநாட்டின் பின்னர், சில மாதங்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்துள்ளது.



# ரஷ்யக் கப்பல்களுக்கு அருகில் ஹவானாவில் கனடியக் கப்பல்!

## கன்சர்வேட்டிவ் கட்சியினர் கடும் விமர்சனம்

ஒன்ராரியோ, ஜூன் 17

கியூபாவுக்கு கனடியக் கப்பலை அனுப்பி வைத்துள்ளமையை பாதுகாப்பு அமைச்சு நியாயப்படுத்தியுள்ளது.

கியூபாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கனடியக் கப்பல், அங்கிருக்கக் கூடிய ரஷ்யக் கப்பல்களுக்கு அருகில் நங்கூரமிட்டுள்ளது.

கியூபாவின் ஹவானா துறைமுகத்திற்கான இந்த விஜயம் நன்கு ஆலோசித்து, திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் டேனியல் மின்டென் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் கடல் பிரசன்னத்தை நிலைநிறுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரஷ்யப் போர்க்கப்பல்களுக்கு மத்தியில் கனடியக் கப்பல் ஒன்று ஹவானாவில் நங்கூரமிடப்பட்டுள்ளமை தமக்குத் தெரியாது என வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்தமையைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியினர் இந்த நகர்வை விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரேனிய...

இந்த விடயத்தில் இனப்படுகொலையின் ஓர் அங்கத்திற்கு ரஷ்யா பொறுப்பேற்க வேண்டும் எனவும் கனடியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த வார விடுமுறையில் நடைபெறும் உக்ரைன் அமைதி மாநாட்டில் 90 உலக நாடுகள் பங்கேற்கின்றன.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விவாதங்களை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு நிகழ்கிறது.

இதில் நடைபெற்ற போரின் மனித பரிணாமம் குறித்த அமர்வுக்கு நோர்வேயுடன் இணைந்து ஜஸ்டின் ட்ரூடோ தலைமை தாங்கினார்.

இந்த அமர்வு போர்க் கைதிகள், பொது கைதிகள், நாடு கடத்தப்பட்ட குழந்தைகள் குறித்துக் கவனம் செலுத்தியது.

இந்த உச்சி மாநாட்டில் ரஷ்யா கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில் உக்ரைனின் கோரிக்கைக்கு சர்வதேச சமூகத்தை அணி திரட்டுவதற்கான அடையாள முயற்சியாகவே இந்த மாநாடு அமைகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்குக்...

சுமார் 30 பாகை செல்சியஸ் முதல் 40 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகலாம் என சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

வெளிநடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தகுந்த முன்னாயத்தங்களுடன் இருக்குமாறும், வயதானவர்கள், நோயாளிகள் மற்றும் குழந்தைகள் தொடர்பில் கவனமாக இருக்குமாறும் சுற்றுச்சூழல் கனடா குறிப்பிட்டுள்ளது.





# ஸ்கார்பரோ துப்பாக்கிச் சூட்டில் பலியான இளைஞன் அடையாளம் காணப்பட்டார்

ஒன்ராரியோ, ஜூன் 17 -

ஸ்கார்பரோவில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்த 16 வயது இளைஞரை பொலிஸார் அடையாளங் கண்டு கொண்டுள்ளனர்.

பேர்ச்மவுன்ட் வீதி மற்றும் கிளென்டவர் சுற்று வட்டத்திற்கு அருகில், ஃபின்ச் எவனியு ஈஸ்ட்டில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஒரு மளிகைக் கடைக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமையை சி.சி.ரி.டி காட்சிகள் உறுதி செய்துள்ளன.

கைகலப்பின் விளைவாகவே இந்த துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் 16 வயதான கேயிலின் ரைடர்-டௌனி என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

# அச்சுறுத்தல்கள் தொடர்பில் தொடர்ந்தும் கனடா அக்கறையின்றி இருக்கக் கூடாது

## பாதுகாப்பு பிரதானி வேய்ன் ஐரே தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 17

தாம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் தொடர்பில் கனடா தொடர்ந்தும் அக்கறையின்றி இருக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதிய உறுதிமொழிகளுடன் கனடிய இராணுவம் முன்னோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும், மாறும் மற்றும் சிக்கலான உலக சூழ்நிலையானது கனடிய எல்லை வரை வந்து விட்டதாகவும் வெளியேறவுள்ள பாதுகாப்பு பிரதானி வேய்ன் ஐரே தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பினை அங்கீகரிப்பது அரசாங்கம் மற்றும் கனடியர்களின் முக்கியமான பொறுப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பாதுகாப்பு செலவுகள் அதிகரிக்கும் என கனடிய பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

நாட்டின் பாதுகாப்புச் செலவுகள் அதிகரிக்கப்படும் என கனடிய பாதுகாப்பு அமைச்சர் பில் பிளயர் தெரிவித்துள்ளார்.

இந்த தசாப்தம் பூர்த்தியாகும் முன்னதாக நேட்டோ கூட்டுப் படையின் பரிந்துரைகளுக்கு அமைய பாதுகாப்பு செலவுகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு வீதம் பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென நேட்டோ அமைப்பு கோரியுள்ளது.

எதிர்வரும் 2029 ஆம் ஆண்டளவில் கனடாவின் மொத்தப் பாதுகாப்புச் செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.75 வீதமாக உயர்வடையும் பிளயர் தெரிவித்துள்ளார்.

கனடிய அரசாங்கம் ஏற்கனவே கண்காணிப்பு விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# எட்டோபிகொக் பகுதியில் சூட்டில் இருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, ஜூன் 17

எட்டோபிகொக் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜூன் 15ஆம் திகதி இரவு 11:30 அளவில் குயின்ஸ்வே மற்றும் நோர்த்குயின் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவத்தில் காயமடைந்தவர்கள் இருவர் நேரடியாக வைத்தியசாலைக்கு சென்றனர் எனத் தமக்கு வைத்தியாலை ஊடாக அறியக் கிடைத்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல் தெரிந்த வர்களை பொலிஸாரிடம் அவற்றைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.